பொது சன நூலகம்
18 JAN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 04 செவ்வாய்க்கிழமை (18 - 01 - 2000) VALAMPURI ஒலி: 30

### ★ யாழ். குடாநாட்டு பாடசாலைகளுக்கு

# தேவையான உபகரணங்கள்

# சிரமத்துடன் எடுத்துவரப்படுகிறது!

## மேலதிக கல்விப் பணிப்பாளர் தகவல்

**யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான இரசாயன மற்றும் ஆய்வுகூடப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் கொழும்பில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் இதனால் உரிய காலத்தில் இப் பொருட்களை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்க முடியாதுள்ளதாகவும் வடக்குக் கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திரு.சிவானந்தன் தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கும், க. பொ. த. உயர்தரத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

யாழ்ப்பாண வலயத்தின் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு, சிவானந்தன் மேலும் பேசுகையில்,

வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான ஆய்வு கூடப்பொருட்களை கப்பலில் அனுப்புவதற்காகக் கொழும்பில் பல இடங்களில் அனுமதி பெறவேண்டியுள்ளதாகவும், தேவையான பொருட்களைப் பட்டியலிட்டு அனுமதிக்காக அனுப்பும் போது அப்பொருட்களில் கணிசமான அளவு வெட்டிக் குறைக்கப்படுவதாகவும். இதன் காரணமாகவே பாடசாலைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை முழுமையாக வழங்க முடியாதுள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பாடசாலை அதிபர்கள் கருத்துத்தெரிவிக்கையில்: 1998 ஆம் ஆண்டு

[6ஆம் பக்கம் பார்க்க]

## பாடநூல் விநியோகம் தாமதம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு

(திருமலை)

இம்மாதம் 21ம் திகதி மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரனா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல் சம்பந்தமாக இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

கல்வி வெளியீட்டுத்திணைக்கழத்தினால் பாடநூல்கள் வெளியிடப் பட்ட போதும் அப்புத்தகங்கள் மாணவர்

( 6ஆம் பக்கம் பார்க்க)

### வடக்குக் கிழக்கு மாகாணத்தின்

## கல்விப் பணிப்பாளர்களின் கூட்டம் திருகோணமலையில் நடைபெறும்

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டமொன்று இம்மாதம் 24ம், 25ம், திகதிகளில் திருகோணமலையில் நடைபெறுமென வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான கல்விச் செயற்பாடுகள் பற்றி ஆராயப்படுவதோடு கல்வி அமுலாக்கலில் உள்ள குறைபாடுகளும் ஆராயப்பட்டுத் தீர்க்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## ஜே. வி. பி ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் ஒடுக்கப்படுவதையும் கட்சித்தாவல், சட்டத்திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை எதிர்த்தும் ஜே. வி. பி நாடுதழுவிய ரீதியில்ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தவுள்ளதாக ஜே.வி.பி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி இருவிடயங்கள் தொடர்பாக நாடுமுழுவதும் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வெளிநாட்டு நிறுவன நிதி உதவி

## அபிவிருத்திக்கு மட்டுமல்லாது

# யுத்தத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தின் புனர்நிர்மாணப்பணிகளுக்காக நிதிவழங்கும் நாடுகளாலும் பொது அமைப்புக்களாலும் அனுப்பிவைக்கப்படும் நிதி திறைசேரியையே சென்றடைகின்றது நிதியைபயன்படுத்துவதற்காக செயல்படும் தொண்டர் நிறுவனங்கள் இருந்தால் மட்டுமே அந்நிதி அபிவிருத்திக்குப் பயன்படுகிறது மற்றவை யுத்தசெலவீனங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் இணையத் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடாத்தப்பட்ட இரண்டாவது ஆய்வுப்பட்டறையை ஆரம்பித்து வைத்துப் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இந்தஆய்வுப்பட்டறையில், யாழ். போதனாவைத்திய

(6ம் பக்கம் பார்க்க)

## பாஷையூர்ப் பகுதிகளில் ஷெல்-தாக்குதல் 3வீடுகள், 2வள்ளம்சேதம், குழந்தைகாயம்

பாஷையூர்ப் பகுதிகளில் நேற்றுமுன்திமினரவு அடுத்தடுத்துவிழுந்து வெடித்த ஷெல்களினால் மூன்று வீடுகள் சேதமடைந்ததுடன் இரண்டு வள்ளங்கள் எரிந்து சேதத்துக்குள்ளானதாகவும் ஒரு குழந்தை காயத்திற்குள்ளானதாகவும் அறிவிக்கப்படுகிறது,

இச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது: நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் பாஷையூர்ப் பகுதிகளில் 4ஷெல்கள்அடுத்தடுத்து வந்து வீழ்ந்துவெடித்ததாகவும் இரவுவேளைகளில்பாஷையூர் மக்கள் வேறு பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்குவதினால் உயிர்ச்சேதங்கள் பெருமளவில்குறைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஷெல், சத்தங்களின் ஓய்வை அடுத்து

## கோயிலாக்கண்டி பகுதியில் இடம்பெயாந்த மக்கள் மீளக் குடியமர்கின்றனர்

கோயிலாக்கண்டிப் பகுதியில் நேற்று சுமார் .5க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கோயிலாக்கண்டியில் பிரதான வீதியை அண்டிய பகுதிகளைச்சேர்ந்த மக்களே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி உள்ளனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்கு வசதியாக தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் தனது தச்சன் தோப்புக் கிளையை மீண்டும் பழைய இடத்தில் திறந்துள்ளது.

## கேரதீவு, கிழக்குஅரியாலைப் பகுதியில் நேற்று கிபிர் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கேரதீவு, கிழக்கு அரியாலைப் பகுதிகளில் நேற்று நண்பகல் கிபிர் குண்டுவீச்சு விமானம் குண்டுத் தாக்குதலை நடாத்திச் சென்றது.

இக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## வேறுஇடங்களில்மீன்பிடிக்கஅனுமதிக்கவும் யாழ். கடற்றொழிலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர், பாஷையூர், அரியாலை, மறவன்புலோ ஆகிய கரையோரப் பகுதிகளில் நிலவும் பதற்ற நிலை காரணமாக இப்பகுதி மீனவர்கள் கடற்றொழில் செய்ய முடியாது இருப்பதினால் வேறுபகுதிகளுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி தருமாறு பலாலி பாதுகாப்புத் தலைமையகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். அரச அதிபர் மூலமாக இவர்களால் விடுக்கப்பட்ட இக்கோரிக்கையில் தற்போது உள்ள சூழ்நிலையில் தீவுப் பகுதி, வடமராட்சி, பொன்னாலைப் பகு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அரசியலில் ஈடுபடுவது சம்பந்தமாக இன்றுவரை சிந்திக்க வில்லை!

### திருமதி குமார் பொன்னம்பலம்

[கொழும்பு]

எனது கணவரின் மறைவிற்கு பின் கட்சித் தலைமையை ஏற்று அரசியலில் ஈடுபடுவதுதொடர்பாக நான் இது வரை சிந்திக்கவில்லை என்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மனைவி திருமதி யோகலட்சுமி பொன்னம்பலம் வலம்புரி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

திருமதி யோகலட்சுமி பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில் அரசியலில் எனது கணவருக்கு உதவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நூல் வெளியீடு

சைவப்புலவர் சு. செல்லத்துரையின் ''வாக்கும் வாழ்வும்'' நூல் வெளியீடு இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலத்தில் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் வியாழக்கிழமை காலை 9.30 க்கு இவ் வெளியீட்டு வைபவம் இடம் பெறும்.

வெளியீட்டுரையை புலவர் ம. பார்வதி நாதசிவமும், மதிப்புரையை மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசாவும், நயப்புரையை அ. பஞ்சாட்சரமும் நிகழ்த்துவர்.

ஆய்வுரையை சைவப்புலவர் க. சத்தியதாசன், சு. யோகராசா ஆகியோர் நிகழ்த்துவர்.

அன்றைய தினம் ''இளவாலை வள்ளுவர் கழகத்தை'' ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தொடக்கிவைப்பார்.

பழைய மாணவிகளின் ''வள்ளி திருமணம்'' நாட்டிய நாடகமும் இடம் பெறும். (க-5)

# த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல். பீரிஸுக்கு கடிதம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெருமளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த வழக்கில் தொடர்பு உடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும், சந்தேக நபர்கள் களுத்துறைச் சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் அதேவேளை அவர்களை மட்டக்களப்பிற்கு கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்தும்—

வழக்கு விசாரணைக்கு அதிகாரிகள் சமூகமளிக்கத் தவறும் நிலையிலுமே இவ் வழக்குகள் பெருமளவில் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை கூடியவிரைவில் மேற் கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா நீதிஅரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிசுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றின் மூலம் தெரிவித்து உள்ளார். (க-05)

## உருவங்கள் சஞ்சிகை

யாழ். மரியன்னை பேராலய இளைஞர்களின் உருவாக்கத்தில் கடந்த 15 ஆண்டுகளாக கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்த ''உருவங்கள்'' இவ்வாண்டு முதல் கணனி அச்சு முறையில் பத்திரிகை வடிவில் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இதன் கணனி மயமாக்கப்பட்ட முதற் பிரதி கடந்த 15 ஆம் திகதி வெளியிடப் பட்டது. (க-14)

## திருமதி. நகுலேந்திரனுக்கு உதவுங்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி மீசாலை வங்களா வீதியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயாகிய திருமதி. சுபாசினி நகுலேந்திரன் இருதய நோயால் பாதிக்கப் பட்டுள்ளார்.

இவருக்கு இருதய மாற்றுச் சிகிச்சை அவசியம் செய்யப்படவேண்டும். என வைத்திய நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இதற்கான செலவாக எட்டு இலட்சம் ரூபா தேவை எனத் தெரிகின்றது.

இவரின் குடும்ப பொருளாதார நிலைமையில் அத்தொகைப் பணத்தைச் செலவிடுவதற்கு இயலாமல் உள்ளது. எனவே இவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு மனிதாபிமான முயற்சியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டுவருகின்றது.

இந்த நிதிக்கு தங்களின் பங்களிப்பை நல்கும்படி சழகத்தின் தலைவர் லயன் எஸ். சந்திரகுமார் கருணை உள்ளம் கொண்டவர்களையும், தயாள சிந்தையுள்ளவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிதியின் பெயரில் சாவகச்சேரி இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கு இல, 16524 ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தங்கள் உதவு தொகையை இக் கணக்குக்கு அனுப்பிவைக்கலாம். அல்லது கழகத்தின் செயலாளர் லயன். வி. வீ. மகாலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (77)

## விளையாட்டுக் கழகங்களை சேர்ந்தவர்கள் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும்

### ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காற்றுறைப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் விடாமுயற்சியுடன் செயற்பட்டு பிரதேச வளர்ச்சிக்கு வழிவகை செய்யவேண்டும்.

மரதன் ஓட்ட நிறைவு வைபவத்தில் ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

புத்தாயிரம் ஆண்டை வரவேற்கும் முசமாக, ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு இடம் பெற்ற மரதன் ஓட்ட நிறைவு வைபவம் விளையாட்டு உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது:

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரை ஆற்றுகையில் 1996 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து மீளக் குடியமரத் தொடங்கிய திலிருந்து பல விளையாட்டு சம்பந்தமான போட்டிகள் நடைபெற்றுள்ளதாகவும்,

உதைப்பந்தாட்டப் பயிற்சி முகாம், கரப்பந்தாட்டப் பயிற்சிமுகாம்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இதுவரை காலமும் இலை மறை காயாக இருந்த அனைத்து இளைஞர்களின் திறமையும் வெளிக்காட்ட களம் அமைக்கப் படும் என்றும்,—

புத்தாயிரமாம் ஆண்டில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து இளைஞர்களின் உள, உடல்ரீதியான வளர்ச்சிக்கு மெருகூட்ட வழிவகை செய்யப்படும் என்றும் கூறினார்.

இப்போட்டியில் 45 இளைஞர்கள் கலந்து கொண்டார்கள் 15 கிலோமீற்றர் தூரம் இலக்குவைக்கப்பட்டு மரதன் ஓட்டம் இடம் பெற்றது. இதில் முதலாவதாக, அண்ணா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெ. றொபின்சன் 59 58 வினாடிகளில் இலக்கை அடைந்து வெற்றியீட்டினார். (க-05)

## மரக்கன்றுகள் விநியோகம்

வலிகிழக்கு பிரதேச சபையினால் சனசமூக நிலையங்கள் ஊடாக மக்களுக்கு மரமுந்திரிகை, தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

அப்பகுதிச் சனசமூக நிலையங்களின் தலைவர்கள் பிரதேச சபை உபகாரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்குமாறு கேட்கப்படுகின்றனர்,

## தபால் சேவை தாமதங்களைத் தடுக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### - பிரதி தபால்மா அதிபர்

(கொழும்பு)

பல வாரங்களாகத் தொடரும், தபால் சேவைத்திணைக்களத்தின் தாமதமான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக கண்காணிப்பு பிரிவு பிரதி தபால்மா அதிபர் ஏ. சேனாவீரர் தெரிவித்துள்ளார்.

அதுபற்றி மேலும் தெரிவிக்கையில், கடந்த மாதம் ஆரம்பத்தில் இருந்து கடிதங்களை விநியோகிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டதையும், மக்கள் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கியதையும் நாம் அறிவோம்.

மிகவும் தவிர்க்க முடியாத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகித்தல், பண்டிகைக்கால வாழ்த்து அட்டைகளைத் தரம்பிரித்தல் முதலானவையும் அரச விடுமுறைகள், ஊர் அடங்குச் சட்டங்கள், ஊழியர்களின் விடுமுறை போன்றவையே இற்றைவரை தபால் சேவையில் ஏற்பட்ட தாமதங்களுக்கு காரணமாகும்.

இனிமேல் இவ்வாறான தாமதங்கள், இடைஞ்சல்கள் ஏற்படாவண்ணம் போதுமான ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சேனாவீரர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## 'கலாபூஷணம்' விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

[கொழும்பு]

கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் தேசிய வீரர் தினத்தன்று இலங்கையின் கலைத்துறைக்குச் சேவையாற்றிய கலைஞர்களுக்கு வழங்கப்படும் ''கலாபூஷணம்'' விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விருதிற்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் மாவட்ட அரச அதிபர் காரியாலயங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அரச அதிபர் ஊடாகவேவிண்ணப்பங்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கலைத்துறையில் 25ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இவ்விருதுபெறத் தகுதி உடையவர்களாவர்.

விண்ணப்பங்கள் கலைஞர்களால் பூர்த்தி செய்யப்பட்டு அரச அதிபர் சிபாரிசுடன் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர். அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (க-9)

## கேணல் கிட்டு நினைவு தினம் உலக நாடுகளில் அனுஷ்டிப்பு

வங்கக் கடலில் உயிர் துறந்த கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளின் நினைவுதினம் நேற்று முன்தினம் உலகில் தமிழர் வாழும் பல பகுதிகளிலும் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப் பட்டது.

பிரான்ஸ், இத்தாலி சுவிற்சர்லாந்து ஆகிய இடங்களில் நினைவுகூரல் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

பிரான்சில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நினைவு நிகழ்வில் தமிழகத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் ஆதரவாளர் சுப. வீரபாண்டியன் நினைவுரைஆற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## புதிய கடற்படைக் கலங்களை கொள்வனவு செய்வதில் இலங்கைஆர்வம்

[கொழும்பு]

இலங்கை கடற்படை நவீன படகுகளை கொள்வனவு செய்வதில் அதீத ஆர்வம் காட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

20 வருடங்கள் இஸ்ரேல் பாவித்த படகுகளை 26 மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்ய இலங் கடற்படையினர் தயாராகி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் வடக்கு - கிழக்கு யுத்தத்தில் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலை சமாளிப்பதற்கு நவீன படகுகள் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் என்ற கருத்து இலங்கை கடற்படையினர் மத்தியில் உருவாகி வருவதையடுத்தே கடற்படை கலங்களை கொள்வனவு செய்ய உள்ளதாகவும்மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வீரசிங்கம் மண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள வீரசிங்கம் மண்டபதிறப்புவிழா எதிர்வரும் 20 ம் திகதி நடைபெற இருக்கிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் 50 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள மண்டபத்தைத் திறந்துவைப்பார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் யாழ்மாவட்ட கூட்டுறவு கணக்கு உதவி ஆணையாளர் திருமதி கோ. திருநாவுக்கரசு ஆகியோர்உட்பட பல கூட்டுறவாளர்கள் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள்.

வீரசிங்க மண்டப திறப்புவிழா பற்றிய மலர் ஒன்றும் வெளியிடப்படும். (க-76)

## சுப்பர்எயிற் போட்டிகள் இன்று ஆரம்பம்

19 வயதுக்குட்பட்டோர் பங்குபற்றும் உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டிகளின் 2ஆம் சுற்றுச் சுப்பர் எயிற் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன,

16 நாடுகள் பங்கு பற்றும் இப் போட்டித் தொடரில் 2ஆம் சுற்றிற்குஇலங்கை, இங்கிலாந்து, மேற்கிந்தியதீவுகள், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நேபாளம், நியூசிலாந்துஆகிய 8நாடுகள்தெரிவாகியுள்ளன- (த)

## களவு அதிகரிப்பு

கடந்த சிலநாட்களாக சங்கானைப் பகுதிகளில் களவுகள் அதிகரித்துள்ளதாக அவ்வூர்மக்கள் தெரிவித்திருக்கிறார்கள், இதுவரையில் 4 துவிச்சக்கர வண்டிகள், முகட்டோடுகள் குழாய்க்கிணறு குழாய்கள், தேங்காய்கள் களவு போயுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (க-12)

## கண் காட்சி

(கரவெட்டி)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நேற்று திங்கட்கிழமையும் இன்று செவ்வாய் ஆகிய இரு தினங்களில் தையல், மனையியல் கண் காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளது. (க-76)


# கண்ணீர் அஞ்சலி

கடந்த 14-1-2000 அன்று படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை நகரசபைத் தலைவர்

**வடிவேலு விஜயரட்ணம்**

அவர்களும்

அவரது சபை ஊழியரான

**முதலி பகீரதன்**

அவர்களுக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீரஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், சபையினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
17-01-2000 (00107)

# வத்தளைப் பகுதி சுற்றிவளைப்பு 52 பொது மக்கள் தடுத்து வைப்பு

வத்தளையில் நேற்று முன்தினம்காலை சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிசார் 52 பேரை விசாரணைக்காக தடுத்துவைத்துள்ளனர்.

கொழும்பில் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட தேடுதலைத் தொடர்ந்து புலிகள் வத்தளைப் பகுதிக்குச்சென்றுள்ளதாக கிடைத்த செய்தியை அடுத்தே இச்சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டதாக வத்தளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிறேமலாஸ்றனகல தெரிவித்தார்

சிரேஸ்ட பொலில் அத்தியட்சகர் ஆர். ரி.எஸ் பெரேராவின் வழிகாட்டலிலேயே மேற்படி சுற்றிவளைப்புஇடம் பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# இலங்கைப் படகுகளை மீட்பதற்காக அதிகாரிகள் குழு இந்தியா விஜயம்

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையின் படகுகளை மீட்பதற்காக இலங்கை உயர் அதிகாரிகள் இந்தியா செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டிலிருந்து அகதிகளாகத் தென் இந்தியாவுக்குச் சென்றவர்களாலும் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்தபோது இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 27 இழுவைப் படகுகளும் 225 இயந்திரப் படகுகளுமாக மொத்தமாக 252 படகுகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட படகுகளின் உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்கம் இந்திய அதிகாரிகளுடன் மேற்கொண்டிருந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்ததைத் தொடர்ந்து-

பாதுகாப்பமைச்சின் உயர் மட்டக் குழு இந்தியா சென்று இந்தப் படகுகளைப் பார்வையிடுவதோடு, அவற்றை உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடுமென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-5)

# நஞ்சு விதைகளை உட்கொண்ட ஐந்து சிறுவர்கள் ஒன்றாக மயக்கம்

(யாழ்ப்பாணம்)

ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்த ஐந்து சிறுவர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவராக நஞ்சு விதைகளை உட்கொண்டனர். இப் பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பகுதியில் இடம் பெற்றது.

விதைகளை உட்கொண்டவர்களில் ஒரு சிறுவன் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து ஐந்து சிறுவர்களும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கம்பர் மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராசலிங்கம் பிரியா [வயது 3], விவேகானந்தன் நிதர்சன் [வயது 3], ஜோசெப் சுவீந்தன் [வயது 4] ரகு சுகன்ஜா [வயது 3], கணேசலிங்கம் தனுசியா [வயது 5] ஆகியோரே நஞ்சு விதைகளை உட்கொண்டவர்களாவர். [க-58]

# நெசவு நிலையம் புனரமைப்பு

(புலோலி)

கரவெட்டி பிரதேச செயலகப் பகுதியில் உள்ள மாலுசந்தி நெசவு நிலையம் 50,000 ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (க-52)

# பாராளுமன்ற காலத்தை நீடிப்பதற்கு ஐ. தே. கட்சி பல எம்.பிக்கள் ஆதரவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்தாமல் மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்ற பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் உடன்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டால் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி காண்பதிலும்பார்க்க மக்கள் அபிப்பிராய வாக்கு நடாத்தி மக்களின் ஆணையைப் பெறும் முயற்சிக்கு வரவேற்புக் கூடுதலாக காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பெருமளவு பணத்தை அரசியல் கட்சிகள் செலவிட்டுள்ளதனால் மற்றுமொரு தேர்தலை நடாத்துவதிலும் பார்க்க மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற பதவிக்காலத்தை நீடிப்பதே மிகவும் சிறந்தது என்றும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது..

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்றக் கூட்டம் நடைபெறும்போது இவ் விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்து முடிவெடுக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் வி. என். ஜயரட்ணா இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் தேர்தலுக்குப் பதிலாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தும் நோக்கம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு கிடையாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

முறைசாரா கல்விப் பிரிவில்

# பொது இறுதிப் பரீட்சை முடிவுகள் நாளை புதன் வெளியிடப்படும்

(அச்சுவேலி)

கடந்த 1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்விவலய முறைசாரா கல்விப் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட அனைத்துப் பயிற்சி நெறிகளினதும் இறுதிப் பரீட்சை முடிவுகள் நாளை புதன்கிழமை வலயம் -1 கல்விப் பணிமனையில் வெளியிடப்படும்என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சென்ற ஆண்டு இப் பயிற்சிகள் கற்பிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் இப் பரீட்சைப் பெறுபேறுகளை நாளைய தினம் வலயக் கல்விப் பணிமனையில் தவறாது பெற்றுக் கொள்ளுமாறுதெரிவித்துள்ள அவர் பரீட்சைகளில் தோற்றிய மாணவர்கள் தமதுபெறுபேறுகளை நாளை முதல் தாம் பயிற்சிநெறியில் பங்கு பற்றிய பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

முறைசாராக் கல்விப் பிரிவில் தமிழ், ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து கணனிப் பயிற்சி, வானொலி, தொலைக்காட்சி சீர்காப்பு, சிகையலங்காரம், பொது அறிவு உட்பட பல்வேறு பயிற்சிநெறிகள் கற்பிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-14)

எஞ்சிய காலத்திற்கு

# வரவு- செலவு திட்டமா; கணக்கு வாக்கா அரச உயர் மட்டத்தில் குழப்பம்

(கொழும்பு)

இவ்வருடம் எஞ்சிய காலத்துக்கு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதா அல்லது மேலும் ஒரு கணக்கு வாக்கை சமர்ப்பிப்பதா என்பது குறித்து அரச உயர்மட்டத்தில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எந்த வேளையில் எதை சமர்ப்பிப்பதானாலும் தாம் தயாராக இருப்பதாக வரவு செலவுத் திட்டப்பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நான்காவது ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இவ் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக மூன்று மாதங்களுக்கான கணக்கு வாக்கே சமர்ப்பிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் தெரிய வருகையில்:

கணக்கு வாக்குத் திட்டம் மார்ச் 31 ஆம் திகதி வரைக்கும் மாத்திரம் நிதியை ஒதுக்கியுள்ளது என்றும்-

எஞ்சிய காகத்துக்கு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும், என்று பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும்மானால் மேலும் ஒரு கணக்கு வாக்கைச் சமர்ப்பிக்கலாமெனவும் அவர் தெரிவித்தார். (க-5)

# பௌத்த- இந்து அமைப்பினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

அக்கரைப்பற்று பகுதியில் பௌத்த,இந்து மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் உருவாக்கும் வகையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டிருப்பதாக தெரியவருகிறது.

இதற்கான முன் முயற்சிகளை சங்கைக்குரிய அத்தம்பிட்டிய விஜியரத்தினதேரர் வணக்கத்திற்குரிய நிமால் மெண்டிஸ்தேரர் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

பௌத்த இந்து மக்கள் மத்தியில் நல்லெண்ணம் உருவாகிவருவதன் குறிகாட்டியாக அண்மையில் பௌத்த மக்கள் பலர் இந்துக்களின் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் உண்டு மகிழ்ந்ததாகவும் திருக்கோயில் சிறீசித்திரவேலாயுதர் ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் சிறப்பு வழிபாட்டு பூஜை நிகழ்வில் சங்கைக்குரிய விஜியதேரர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதாகவும் தெரியவருகிறது. (க-09)

# ஆசிரிய இடமாற்றங்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று நிந்தவூர் ஆகிய பகுதி ஆசிரியர்கள் இருவர் ஆசிரிய இடமாற்றங்கள் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டு மனித உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ் வழக்கில் அக்கரைப்பற்று, கல்முனை பிரதேச கல்விப்பணிப்பாளர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அம்பாறை மேல் நீதிமன்ற நீதியரசர் இவர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறு பணித்துள்ளார். இம் மாதம் 24-ம் திகதி இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. (க-7)

# கட்டிய மனைவியை கோடரியால் வெட்டிய கணவனை பொலிசார் தேடுகின்றனர்

(மட்டக்களப்பு)

கட்டிய மனைவியை கண்டபடி தும்புத்தடியால் தாக்கிவிட்டு கோடரியினால் காலை வெட்டி துண்டாக்கிய கணவனை காத்தான்குடி பொலிஸார் தேடி வருகின்றனர். இச்சம்பவம் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பில் இடம் பெற்றுள்ளது.

விவேகானந்தம் பாக்கியவதி என்பவரது கால் துண்டாடப்பட்ட பெண் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கூலிவேலை செய்யும் மேற்படிகணவன் உழைக்கின்ற பணத்தை தினமும் மது அருந்தி விட்டு வருவதால் கணவனுக்கும், மனைவிக்குமிடையே தினமும் சச்சரவுகள் ஏற்படுவதுண்டு. அன்றைய தினம் மனைவியை கொலை செய்யும் நோக்குடனேயே கோடரியால் வெட்டியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-60)

பம்பை இனத் தேனீயை இலங்கைக்கு

# கொணர்ந்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும்

(கொழும்பு)

பம்பை இன தேனீயை இலங்கைக்கு இறக்குமதி செய்த நபருக்கு எதிராக சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்வதற்கு உத்தேசித்துள்ளதாக அந் நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்த வகைத் தேனீக்களை கொண்டு வந்தது தொடர்பாக சமீப நாட்களில் பல்வேறு கருத்து வேற்றுமை நிலவி வந்ததின் காரணமாக இத் தேனீக்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை இத் தேனீக்களை விஞ்ஞானிகளின் ஆலோசனை இல்லாது கொண்டு வருதல் பல்வேறு பாதிப்புக்களையும், உயிரின வாழ்க்கை சூழலின் சமநிலையையும் பாதிக்கக்கூடும் என்றும் சூழல் சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (க-14)

# வீதி திருத்தம்

(திருநெல்வேலி)

கலட்டிப் பகுதியில் உள்ள இராமநாதன் வீதி திருத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணமாக அவ்வீதி வழியாக மக்கள் சிரமம் இன்றி பயணம் செய்யக்கூடியதாக உள்ளது. (க-76)

# இன்று சிறுவர் நாடகப்போட்டி

(அச்சுவேலி)

கல்விக் கோட்ட மட்டங்களில் நடாத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கிடையேயான வலயமட்டத்திலான சிறுவர் நாடகப் போட்டி இன்று முற்பகல்10 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# கிணற்றுள் வீழ்ந்தவர் காயம்

(பொலிகண்டி)

கடந்த சில தினங்களின் முன் வீட்டுக் கிணற்றினுள் வீழ்ந்து ஒருவர் காயத்துக்குள்ளானார்.

பொலிகண்டியைச் சேர்ந்த க.பரராஜசிங்கம் என்பவர் தவறுதலாக வீட்டுக்கிணற்றினுள் வீழ்ந்து வலது கால் முறிவடைந்த நிலையில் பருத்தித் துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (க)

# க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான
# பொது சாதாரண பரீட்சைக்குரிய வினாக்கள்

### 3 மறை வகை

இவ்வுருப்படி வகைப் பிரச்சினை மறை வடிவத்தில் தரப்படும். இங்கு பரீட்சார்த்தி யாதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தவறான அல்லது பொய்யான அல்லது பொருத்தமற்ற விடையைத் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும். கல்விக் கோட்பாட்டைப் பொறுத்தவரை மறை விடயங்களை விடையாகத் தெரிந்தெடுத்தல் அவ்வளவு பொருத்தமற்றதாக இருக்கின்றபோதிலும் சில விடயங்கள் தொடர்பாகப் பல்தெரிவு வினாக்களை அமைப்பதில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றமையால் இவ்வகை உருப்படிகளையும் தயாரிக்க வேண்டியிருக்கும்.

**உதாரணம்:-**

சனநாயக நாடு ஒன்றின் நற் பிரசையிடம் இருக்க வேண்டிய இயல்பாக அமையாதது யாது?

(1) தலைமையை ஏற்றுக்கொள்ளவும் வகிக்கவும் கூடியதாக இருத்தல்.
(2) வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளல்.
(3) எப்போதும் அச்சிட்ட சொல்லின் வலிமையை ஏற்றுக்கொள்ளல்.
(4) அந்நியர்களின் கொள்கை தொடர்பாகத் திறந்த மனத்துடன் இருத்தல்.
(5) பெரும்பாலானோரின் கருத்தை ஏற்றுக்கொள்ளப் பழகுதல்.

### இயைபுபடுத்தல் தெரிவு வகை

இவ்வகை உருப்படியைத் தயாரிப்பதன் மூலம் மேலும் சிக்கலான அறிவை அளவிடும் வாய்ப்புக் கிடைக்கும். யாதாயினும் ஒரு தொனிப்பொருள் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் பற்றிப் பரீட்சார்த்திகளின் அறிவை அளவிட வேண்டியபோது இவ்வுருப்படி வகையைப் பயன்படுத்தலாம்.

**உதாரணம்:-**

வைரசு நோய்க்காக வக்சீன் கொடுக்கப்பட்ட ஒருவர் அந்நோயினால் தாக்கப்படும் சந்தர்ப்பங்கள் அரிதாகும். அதற்குக் காரணங்களாகக் கருதத்தக்க மூன்று விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. வக்சீனின் உள்ளடக்கத்தின் மூலம் உடம்பினுள்ளே பிறபொருளெதிரிகளை உண்டாக்கல்.
B. வக்சீனின் விளைவாக உண்டாகிய பிறபொருளெதிரிகளின் மூலம் உடம்பினுள்ளே புகும் வைரசுக்களை அழித்தல்.
C. வக்சீனின் உள்ளடக்கத்தின் மூலம் நோய் வைரசு உடம்பினுள்ளே புகுதலைத் தடுத்தல்.

வக்சீனைப் பெறுகின்றமையால் நோய் தாக்கும் வாய்ப்புக்கள் அரிதாக இருத்தல் தொடர்பாக.

(1) A செல்வாக்குச் செலுத்துகின்றது. B யும் C யும் செல்வாக்குச் செலுத்துவதில்லை.
(2) A செல்வாக்குச் செலுத்துவதில்லை. B யும் C யும் செல்வாக்குச் செலுத்துகின்றன.
(3) C செல்வாக்குச் செலுத்துவதில்லை. A யும் B யும் செல்வாக்குச் செலுத்துகின்றன.
(4) C செல்வாக்குச் செலுத்துகின்றது. A யும் B யும் செல்வாக்குச் செலுத்துவதில்லை.
(5) B செல்வாக்குச் செலுத்துகின்றது. A யும் C யும் செல்வாக்குச் செலுத்துவதில்லை.

**உதாரணம்:-**

குறித்த நாடு ஒன்றின் மொத்தத் தேசிய உற்பத்தி 4530 மில்லியன் டொலரும் தேய்மான அனுமதி 2 மில்லியன் டொலரும் நேரில் வரிகள் 4 மில்லியன் டொலரும் உதவிப்பணம் 6 மில்லியன் டொலரும் ஆகும். அந்நாட்டின் தேறிய தேசிய உற்பத்தியைச் சந்தை விலையில் கணிக்குமாறு உம்மிடம் கூறப்பட்டால், நீர் அதற்காகப் பின்பற்றும் முறை பின்வருவனவற்றில் யாது?

(1) மொத்தத் தேசிய உற்பத்தி - [நேரில் வரிசைகள் சக உதவிப்பணம்]
★ (2) மொத்தத் தேசிய உற்பத்தி - [நேரில் வரிகள் சக உதவிப்பணம் சக தேய்மான அனுமதி]
(3) மொத்தத் தேசிய உற்பத்தி - [உதவிப்பணம் சக தய்மான அனுமதி]
(4) மொத்தத் தேசிய உற்பத்தி - [தேய்மான அனுமதி]
(5) மொத்தத் தேசிய உற்பத்தி - [உதவிப்பணம்]

**உதாரணம்:- 1**

குருதிச் சுற்றோட்டம் நடைபெறுவதைக் கண்டுபிடித்த ஆண் விஞ்ஞானி

(1) லூயி பாஸ்ரர்
★ (2) விலியம் ஹாவி
(3) மாரி கியூறி
(4) ஐசாக் நியூற்றன்
(5) மைக்கல் பரடே

இவ்வுருப்படியிலே தண்டில் ஆண் பற்றிக் கூறியிருப்பதால், அதன் 3 ஆம் தெரிவை நீக்கித் திருத்தமான விடையைத் தெரிந்தெடுப்பதில் பரீட்சார்த்தி ஈடுபடலாம்.

● ஒருவர் தாம் அறிந்த யாதாயினும் சிறிதளவு விடயத்தைப் பயன்படுத்தித் திருத்தமான விடையைத் தெரிந்தெடுக்கலாம். பின்வரும் உதாரணம் அத்தகைய சந்தர்ப்பத்தைக் காட்டுகின்றது.

**உதாரணம்:- 2**

உலகின் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படும் பண வகைகள் பின்வரும் விடைகளில் தரப்பட்டுள்ளன. பிரித்தானியா, ரூசியா, அமெரிக்கா, பிரான்சு, யப்பான் ஆகிய நாடுகளிலே புழக்கத்தில் இருக்கும் பண வகைகளை முறையே கொண்டுள்ள விடையைத் தெரிந்தெடுக்க.

★ (1) பவுண், ரூபிள், டொலர், பிராங், யென்
(2) டொலர், பிராங், ரூபிள், யென், பவுண்
(3) ரூபிள், பவுண், பிராங், யென், டொலர்
(4) பிராங், டொலர், யென், பவுண், ரூபிள்
(5) டொலர், யென், ரூபிள், பவுண், பிராங்

இவ்வினாவிலே பரீட்சார்த்திக்கு ஒரு நாட்டிலே புழக்கத்தில் இருக்கும் பண வகை மாத்திரம் தெரிந்திருந்தாலும் அவர் புத்திமானெனின், திருத்தமான விடையாக 1 ஐத் தெரிந்தெடுப்பதில் வெற்றியீட்டுவார்.

● சிலவேளைகளில் பரீட்சகர் தம்மை அறியாமலேயே ஓர் உருப்படிக்குரிய திருத்தமான விடையைத் தெரிந்தெடுக்கத் தேவையான சாடையை வேறோர் உருப்படியில் சேர்த்திருப்பார். பின்வரும் இரு உருப்படிகளையும் கவனிக்க.

**உதாரணம் 3**

சுற்றாடல் வெப்பநிலைக்கு ஏற்ப உடலின் வெப்பநிலை மாறாத விலங்கு பின்வருவனவற்றில் யாது?

(1) பாம்பு (2) தவளை (3) முதலை
(4) ஓணான் ★ (5) சிங்கம்

**உதாரணம் 4**

சுற்றாடல் வெப்பநிலைக்கு ஏற்ப உடலின் வெப்பநிலை மாறும் விலங்கு பின்வருவனவற்றில் யாது?

★ (1) பாம்பு (2) நாய் (3) கங்காரு
(4) திமிங்கிலம் (5) கரடி

இங்கு உதாரணம் 3 இன் உருப்படியில் திருத்தமான தெரிவு சிங்கமாகும். பாம்பின் உடலின் வெப்பநிலை சுற்றாடலின் வெப்பநிலைக்கு ஏற்ப மறுகின்றமையால் முதலாம் தெரிவாகிய பாம்பு பிழையான தெரிவாகும். இதற்கு அமைய பார்க்கும்போது உதாரணம் 4 இல் உள்ள தெரிவுகளிடையே பாம்பு தவிர மற்றைய எல்லாத் தெரிவுகளும் புதியனவாகும். என்வே புத்திமானாக பரீட்சார்த்தி உதாரணம் 4 இலே திருத்தமான தெரிவாகப் பாம்பை எளிதாகத் தெரிந்தெடுக்கலாம்.

4 பரீட்சகர் சிலவேளைகளில் ஓரே சொற்கள் சிலவற்றை எல்லாத் தெரிவுகளிலும் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு முற்படுவர். இது உருப்படி பலமற்றதாக அமைவதற்குக் காரண்மாகின்றது. எனவே ஒரு சொல்லை யாதாயினும் ஒரு விதத்தில் திரும்பத் திரும்பத் தெரிவுகளில் இடுவதற்கு நேரிடுமாயின் அச் சொல்லைத் தண்டிலே சேர்ப்பதற்கு முயலுதல் வேண்டும்.

**உதாரணம்**

சனநாயகம் தொடர்பாய் பின்வரும் கூற்றுகளில் எது பிழையானது?

(1) சனநாயகம் பெரும்பான்மையினரின் கொள்கையை முக்கியமானதாகக் கருதுகின்றது.
(2) சனநாயகத்திற்கு ஏற்ப எதிரிகளின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
(3) சனநாயகத்தினுள்ளே எதிர்ப்பதற்கு வாய்ப்பு உண்டு.
(4) சனநாயகம் தனியாளையன்றித் தனியாளின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கின்றது.
(5) சனநாயகம் கலந்துரையாடலுக்கும் விவாதத்திற்கும் முக்கிய இடமளிக்கின்றது.

இவ்வுருப்படியில் எல்லாத் தெரிவுகளிலும் சனநாயகம் என்னும் சொல் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றது. அத்தகைய கோலம் சிலவேளைகளில் உருப்படிகளின் அழகைக் குறைப்பதற்குக் காரணமாக இருக்கலாம். உருப்படியின் அமைப்பைச் சிறிதளவில் மாற்றுவதன் மூலம் உருப்படியின் பாங்கை மாற்றலாம். மேற்குறித்த உருப்படியை வேறு பாங்கில் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

சனநாயக ஆட்சி முறையில் காணப்படாத இயல்பு பின்வருவனவற்றில் யாது?

(1) பெரும்பான்மையினரின் கொள்கைக்கு மதிப்பளித்தல்.
(2) எதிரிகளின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளல்.
(3) யாதாயினும் கருத்தை எதிர்ப்பதற்கு வாய்ப்பு இருத்தல்.
(4) தனியாளை அன்றித் தனியாட்களின் கருத்துகளுக்கு மாத்திரம் மதிப்பளித்தல்.
(5) கலந்துரையாடலுக்கும் விவாதத்திற்கும் முக்கிய இடமளித்தல்.

5. தெரிவுகளுக்கு ஆண்டுகள், இலக்கங்கள், சதவீதப் பெறுமானங்கள், வேறு பெறுமானங்கள் ஆகியவற்றை இட வேண்டுமெனின், அவற்றைப் பெறுமானத்திற்கு ஏற்ப ஏறு முறையிலோ, இறங்கு முறையிலோ இடுவதற்குக் கவனமாக இருத்தல் வேண்டும்.

6. பரீட்சகர்கள் சிலர் உருப்படிகளில் திருத்தமான தெரிவுகளை மற்றைய தெரிவுகளிலும் பார்க்க நீண்டனவாக அமைப்பதற்குத் தம்மை அறியாமலேயே முற்படுவர். எவ்வாறாயினும் பரீட்சகரின் இப்பலவீனத்தைப் புத்திமானான பரீட்சார்த்தி சிறிது நேரத்தில் விளங்கிக் கொள்ள முடியும். அது திருத்தமான விடையைத் தெரிந்தெடுப்ப

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ( இராசி பலன் )

18 - 01 - 2000
செவ்வாய்கிழமை
(தமிழுக்கு தை 04)

மாலை 6.33வரை; ரோகினி காலை 11.04 வரை, அமிர்த சித்தயோகம். இராகுகாலம் மாலை 4.5 முதல் 5.30 வரை, சுபநேரம் காலை 11.36 முதல் 10.6 வரை

**மேடம்:**
அதிக சிந்தனை, குடும்ப பிரிவு, வேலைப்பழு

**இடபம்:**
உல்லாசப்பயணம், மன நிறைவு, காரியசித்தி

**மிதுனம்:**
படிப்பினை, தொழில் நஷ்டம், உடல் உபாதை

**கடகம்:**
காரியசித்தி, வாகன யோகம், பணவரவு

**சிங்கம்:**
அடங்கிப்போதல், புதிய பிரச்சனை, அசதி,

**கன்னி:**
முட்டுக்கட்டை, கடன் வாங்கல், புத்திரர் செலவு

**துலாம்:**
பெற்றோர் கோபம், சகோதர வெறுப்பு, ஆவேசம்

**விருச்சிகம்:**
நியாயம்கற்பித்தல், வாக்கு வசீகரம், புதியஉறவு

**தனுசு:**
சான்றோர்கரிசனை, புதிய பதவி, தானதர்மம்

**மகரம்:**
இடையூறு, வாகன நஷ்டம், பொருள் இழப்பு

**கும்பம்:**
கடுந்தொல்லை, வேற்றுமை, புறம்கூறல்

**மீனம்:**
தேடிவரும் உறவு, பணப்புழக்கம், பாராட்டு

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## இளம்பெண் காயம்

(ஈச்சமோட்டை)

பாஷையூர் கத்தோலிக்க கன்னியர்மட வளவினுள் நேற்று 17 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் ஷெல்ஒன்று வீழ்ந்துவெடித்தது. இதனால்கன்னியர்மடத்தில்தங்கியிருந்தசசி(வயது16) எனும் இளம்பெண் தொடையில் காயமடைந்து சத்திர சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். கொழும்புத்துறை பாஷையூர் கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து சில ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன அவற்றில் ஒன்றே மேற்படி கன்னியர்மடவளவினுள் வீழ்ந்து வெடித்தது இதனால் அங்குள்ள சில மரங்களும் மலசலகூட கூரைப் பகுதியும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

(க-59)

## இரவு வேளையில் கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

இரவு வேளை இனம் தெரியாதோர் நடத்திய கத்தி வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கொக்குவில் பகுதியில் இடம் பெற்றது.

கொக்குவில் மேற்கு கொக்குவிலைச் சேர்ந்த பாலசிங்கம் பிரசன்னா (22 வயது) என்ற இளைஞனே முகத்திலும் முதுகிலும் வெட்டுக் காயங்களுடன் படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-58)

கேடில் விழுச் செல்வம்
கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை.
- குறள்

# வலம்புரி

## எங்கள் செல்வம் தேய்வதா?

ஸ்ரீலங்காவிலே கல்வித் துறையில் முன்னணி வகித்த யாழ். குடாநாட்டின் பரிதாப நிலை பற்றிச் சிந்திக்கும் போது நெஞ்சு கனக்கிறது. இரு பதினாயிரம்மாணவர்கள் வறுமை காரணமாக பாடசாலை செல்வதில்லையாம். குடா நாட்டின் வாழ்க்கை நிலை யுத்த அனர்த்தங்களால் சீரழிந்திருப்பதையே இது காட்டுகிறது.

யாழ். மாவட்டத்தில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர். இருபத்தேழாயிரம் மாணவர் ஒழுங்காக பாடசாலைக்குச் செல்வதில்லை. கல்வியில் ஆர்வம் காட்டுவதில்லை. அன்றியும் இருபத்தைந்து வீதத்தினர் மெல்லக் கற்போராவர். ஆதலால் கணிதம், தாய் மொழி என்பவற்றில் மந்தமாகவும் உள்ளனர்.

போரினால் பதின் மூவாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் அநாதைகளாகியுள்ளனர். கல்வி மட்டுமன்றி அன்றாட வாழ்வுமே இவர்களுக்குக் கேள்விக் குறியாகவுள்ளன. போர்ச் சூழலின் அச்ச உணர்வுகாரணமாக மன உளைச்சலுக்கு உள்ளானவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கல்விசார்அறிஞர்களும் புத்திஜீவிகளும் இந்த ஆபத்தான கட்டத்திலிருந்து தமிழ்மாணவர்களின் கல்வியைப் பாதுகாப்பதற்குத் திட்டமிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதுஅவசியம். கல்விக்கான புதிய திட்டங்களையும், நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

அறிவுசார் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிகள் அனைத்தும் செய்தாக வேண்டும். வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாதவர்களின் நிலையைத் தமிழர் சமூகம் விசேடமாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மேலே கூறிய கருத்துக்களை உள்வாங்கி ஆசிரியர் பெற்றோர் பொறுப்புணர்வுடன் செயற்பட்டாக வேண்டும். மாணவர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியதாக ஆசிரியப்பணி உயர்ச்சியடைய வேண்டும்.நோக்கம்தெளிவானதாக குறிக்கோளைநிலை நிறுத்தும் தீர்க்கமான செயற்பாடுகள் செறிவதாக.

அன்புடன் ஆசிரியர்

தனியார் பாடசாலைக்கு

# கட்டணம் செலுத்துவதற்காக கள்ள நோட்டு உபயோகம்

( புதுடில்லி )

சென்னைபுதுடில்லியிலுள்ள தனியார் பாடசாலை ஒன்றின் கட்டணத்தை செலுத்துவதற்காக பாகிஸ்தானிய ஊழியர் ஒருவர் கள்ள நோட்டுக்களைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு ஒன்றை அடுத்து பொலிசார் புலனாய்வுப் பணிகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் தாராளமாக கள்ள நோட்டுக்களை அச்சிடுவதாக ஏற்கனவே இந்திய அதிகாரிகளுக்குப் பலர் எச்சரிக்கை விடுத்தமையின் பின்னர் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற விமானக் கடத்தல் சம்பவத்தின் பின்னர் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டிருந்த விரிசலிற்கு இச் சம்பவம் மேலும் தூண்டுகோலாக அமைந்துள்ளது என குறிப்பிடப் படுகிறது.

இக் குற்றச்சாட்டை அடுத்து பாகிஸ்தான் தனது மறுப்பை வெளியிட்டுள்ளதோடு இது குறித்து பாகிஸ்தான் இஸ்லாமபாத்திலுள்ள இந்திய தூதரை அழைத்து இதுகுறித்த தனது வருத்தத்தையும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பெருமளவு கள்ள நோட்டுக்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானிய இராஜதந்திரி ஒருவரை நேபாள அரசு திருப்பியனுப்பியதாக ஏற்கனவே செய்திகள் தெரிந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(7)

## கருணாநிதி மறுப்பு

[புதுடில்லி]

காலஞ்சென்ற முன்னாள் நிதியமைச்சர் இரா.நெடுஞ்செழியனுக்கு நினைவிடம் அமைக்க சென்னைக் கடற்கரையில் இடஒதுக்கீடு செய்யுமாறு செல்வி ஜெயலலிதா தமிழக அரசுக்கு விடுத்த கோரிக்கையை முதலமைச்சர் கருணாநிதி மறுத்திருப்பதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

(க-09)

## விபத்தில் சிக்கிய சுவிஸ் விமானம் லிபியக் கடற்பகுதியில் மூழ்கியது

(பேர்ண்)

சுவிஸ் நாட்டு விமானம் ஒன்று லிபியாவின் கடற்பகுதியில் விபத்திற்குள்ளாகி மூழ்கியுள்ளதாக சுவிஸ் போக்குவரத்துத்துறைஅமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானத்தில் எண்ணெய் வயல்களில் வேலை செய்துவரும் பிரித்தானியர்களும் லிபியர்களுமே அதிகளவில் பயணம் செய்திருந்தனர்.

கடலில்மூழ்கிய இந்த விமானத்திலிருந்து 18 பேர் உயிருடன் மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை உயிரிழந்தோர் பற்றி விபரம் எதுவும் வெளிவரவில்லைஎன்றும் தெரிவித்துள்ள அமைச்சர் இந்த வாரத்தில் விபத்துக்குள்ளான இரண்டாவது சுவிஸ் விமானம் இது என்றும் தெரிவித்துள்ளார். (க-14)

## இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகம் கருங்கல் ஏற்றுமதியில் உலக சாதனை

இந்தியாவில் அமைந்துள்ள தூத்துக்குடி துறைமுகம் கருங்கல் ஏற்றுமதியில் புதிய உலக சாதனை படைத்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி, அதாவது கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டும் இந்த துறைமுகத்தில் இருந்து 32,592 தொன் கருங்கல் இத்தாலி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதே உலக சாதனைக்கு காரணமாகியுள்ளது.

பிறேசில் நாடானது 20,000 தொன் கருங்கல்லை ஏற்றுமதி செய்ததன் மூலம் ஒரே நாளில் அதிக கருங்கல்லை ஏற்றுமதி செய்ததான சாதனையில் இவ்வளவு காலமும் முதலிடத்தில் இருந்தது. இதனை கடந்த 25 ஆம் திகதி இந்தியா முறியடித்துள்ளது.

இது பற்றி தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் மச்சகேந்திர நாதன் கருத்து தெரிவிக்கையில்; தூத்துக்குடி கடலின் ஆழம் 10.7 மீற்றர் கூடுதலாக்கப்பட்டிருப்பதன் மூலம் பெரிய கப்பல்கள் வந்து திரும்பும் அளவிற்கு போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதே இச் சாதனை படைப்பதற்கு உந்து சக்தியாக அமைந்ததாக கூறப்படுகிறது.

(க-9)

## சீனாவில் நில நடுக்கம் நால்வர் பலி

சீனாவில் நேற்று மிக மோசமான நில நடுக்கம் இருமுறை ஏற்பட்டுள்ளது இது 5, 9, 6; ஹெக்ரரில் பதிவாகிஉள்ளது.

நான்கு பேர் கொல்லப்பட்டனர் 400 பேர் காயம் அடைந்தனர் 28 பேர் மிக மோசமான முறையில் காயப்பட்டுள்ளனர்65,000றக்குமேற்பட்ட கட்டடங்கள் சேதத்திற்கு உள்ளாயின ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் அலைந்துதிரிந்தனர்

## இந்தோனேசியா மீதான ஆயுதத்தடை மீண்டும் புதுப்பிக்கப்படமாட்டாது - ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியா மீதுவிதித்துள்ள ஆயுதத் தடை மீண்டும் புதுப்பிக்கப்படமாட்டாது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியா மீதான ஆயுதத் தடையை நீடிக்க வேண்டும் என்று சுவிஸ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும் அதனை பிரிட்டனின் இணை அமைச்சர் ஜோன் பாற்றல் நிராகரித்துள்ளார்.

இதே வேளை இந்த தடைச் சட்டம் மேலும் தொடர வேண்டுமாயின் ஐக்கிய ஒன்றியத்தின் ஏகோபித்த வாக்குகள் கிடைக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (க-14)

## அமெரிக்க டொலரை ஈக்குவடோர் நாணயமாக்கும் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு

அமெரிக்க டொலரை ஈக்குவடோரின் நாணயமாக்கும் அந்த நாட்டு ஜனாதிபதி ஜமீல்மஹீட்டின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் ஆசிரியர்கள் தொழிலாளர்கள் உட்படப் பலர் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளதுடன் வன்முறைகளிலும் ஈடுபட்டுவருவதாக ஈக்குவடோர் அதிகாரியொருவர்தெரிவித்துள்ளார்.

தலைநகர் குவிட்டோவில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்த ஏறத்தாழ 500 பேர் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் 60 பேரை தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்மேலும் பல கலவரங்கள் நாட்டில் நடக்கக்கூடிய ஏது நிலை தென்படுவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

## க. பொ. த. உயர்தர....

தற்குச் சாடையாக அமையும்.

7. திருத்தமான தெரிவை (விடையை) யாதாயினும் ஓர் ஒழுங்கில் யாதாயினும் குறித்த ஓர் இடத்தில் இடுவதற்கு முற்படும் பரீட்சகர்களும் உள்ளனர். சிலவேளைகளில் பரீட்சகர் எவரும் திருத்தமான தெரிவாகிய 2 அல்லது 4 ஐ விடையாகத் தொடர்ந்து பேணிக்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டிருந்தால், பரீட்சார்த்திகள் அக்கோலத்தை விளங்கிக் கொள்வர். அதிக புள்ளிகளைப் பெறுவதற்கான சாடையாக அது அமையும் வாய்ப்பு உண்டு.

8. சிலவேளைகளில் பரீட்சகர்கள் தண்டில் எப்பிரச்சினையையும் தராமல் இருப்பதைக் காணலாம். பல்தெரிவு உருப்படியில் வினா தண்டில் எடுத்துரைக்கப்படுதல் வேண்டும் என்னும் கோட்பாட்டை அவர்கள் மறந்திருப்பதாகத் தெரிகின்றது. அத்தகைய உருப்படிகளில் இடப்படும் தெரிவுகளும் சிலவேளைகளிலே சமாந்தரமாக அமைவதைக் காண முடியாது.

உதாரணம்

இலங்கை

(1) போத்துக்கேயரினாலும் ஒல்லந்தரினாலும் படையெடுக்கப்பட்டது.

(2) ஒல்லாந்தரினாலும் ஆங்கிலேயரினாலும் படையெடுக்கப்பட்டது.

★ (3) போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினால் படையெடுக்கப்பட்டது.

(4) பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினால் படையெடுக்கப்பட்டது.

(5) போர்த்துக்கேயர், பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினால் படையெடுக்கப்பட்டது.

இவ்வுருப்படியில் காணப்படும் தண்டின் மூலம் எந்த வினாவும் எடுத்துரைக்கப்படவில்லை.

இவ்வுருப்படியைப் பின்வருமாறு திருப்திகரமாக மாற்றியமைக்கலாம்.

இலங்கைக்குப் படையெடுத்த அந்நிய ஆட்சியாளர் யார்?

(1) போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும்

(2) ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும்

★ (3) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர்

(4) பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர்.

(5) போத்துக்கேயர், பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர்.

## தீவிரவாத குழுக்களை ஒடுக்குமாறு பாகிஸ்தானிடம் வேண்டுகோள்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாதக்குழுக்களை ஒடுக்குமாறு பாகிஸ்தானை பிரிட்டனும் அமெரிக்காவும் கேட்டுளளதாக தநியூஸ் என்றும் நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக ஹர்க்கதின் முஜாஇதின் என்ற தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளை முற்றாக தடைசெய்யவேண்டும் என்றும் ஆப்கானில் அமைதி ஏற்பட உதவும் படியும் சவூதி தீவிரவாத பின்லேடனை கைதுசெய்ய உதவும் படியும் இந்தியாவுடன் உறவை மேம்படுத்துமாறும். மக்களாட்சி ஏற்படுத்த ஒரு காலவரம்பை குறிக்குமாறும் அவ்விருநாடுகளும் பாகிஸ்தானை கேட்டுள்ளதாக தநியூஸ் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(க)

## இரட்டைதட்டு பஸ் வண்டி குடைசாய்ந்ததில் 42 பேர் பலி

(மெக்சிக்கோ)

ஆர்ஜென்டீனா உல்லாசப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பிரேஸிலின் மலைப்பகுதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இரட்டைத்தட்டு பஸ் வண்டி யொன்று சாரதியின் கட்டுப்பாட்டையும் மீறி குடைசாய்ந்ததில் 39 ஆர்ஜென்டீனர்கள் உட்பட 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரேஸிலின் தெற்குமாநிலமான காண்டா கதரினாவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இறந்தவர்களில் 6 குழந்தைகளும் அடங்குவர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-14)

# மன்னார் அரச அதிபர் குறூஸ் இடமாற்றம்

மன்னார் அரச அதிபர் திரு. குறுஸ் பொது நிர்வாக உளநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப் படவுள்ளார்.

மன்னார் அரச அதிபர் திரு. குறுஸ் கேட்டுக்கொண்டதை அடுத்த இந்த இடமாற்றம் நடைபெறவுள்ளது.

மன்னார் அரச அதிபராக தற்போது மேலதிக அரச அதிபராக இருக்கும் திரு. வை. விஸ்வலிங்கம் நியமிக்கப் படவுள்ளார் எனத்தெரிய வருகிறது.

திரு. குறுஸ் அடுத்த வாரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் பதவி ஏற்பார் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிறப்பு இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திர கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது

பிறப்பு, இறப்பு, திருமண பதிவு அத்தாட்சிப் பத்திரங்களின் கட்டணம் அதிகரிக்கப்பட விருப்பதாக பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்,

பிறப்பு இறப்பு, திருமணப் பதிவு அத்தாட்சிப் பத்திரங்கள் பழுதடையா வண்ணம் இருப்பதற்காக அதனைச் சீரான முறையில் செய்வதற்காக இக்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது,

தற்போது 5ரூபா முத்திரையுடன் இப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது, கட்டணம் அதிகரிக்கப்படின் 25 ரூபா முத்திரை ஒட்டி இப்பத்திரங்களைப் பெறவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது,

# ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட பார்சலில் குண்டு கண்டுபிடிப்பு

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பார்சலில் குண்டு ஒன்று கண்டுபிடுக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகலில் ஜனாதிபதியின் பெயரிடப்பட்ட மேற்படி பார்சல் சற்று வித்தியாசமாக இருப்பதைக்கண்ட ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் அதனைஎக்ஸ்றே கதிர்கள்மூலம் பரிசோதித்ததில் குண்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்ட பின்பே ஜனாதிபதியின் வாசஸ்தலத்திற்கு அனுப்பப் படுவது வழக்கமாகும். (ந-4)

## திறப்புவிழா

நல்லூர்ப் பிரதேச சபையினால் ஆணைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை நாளைக் காலை 10 மணியளவில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் திரு. க. மணிபல்லவராஜன் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

**தேவையான . . .**

செப்ரெம்பர்மாதம்இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தை யாழ்ப்பாணப் பாடசாலைகளில் முழுமையாகச் செயற்படுத்துவதற்கு கல்விச் சாதனங்கள், பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில்உரிய அளவில் கிடைக்க வேண்டுமென கேட்டுக் கொண்டனர்,

தென்னிலங்கை மாணவர்கள் அனுபவிக்கும்கல்வி வசதிகள் எமது மாணவர்களுக்குக் கிடைக்காமை குறித்து கருத்தரங்கில் கலந்து கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் விசனம் தெரிவித்தார்கள். (ந)

**பாட நூல் . . .**

களுக்கு கிடைக்கப்பெறாமை பற்றி அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

7ம் ஆண்டு 9ம் ஆண்டுகளுக்கான பாடநூல்கள் இன்னமும் அச்சிடப்படவில்லை என்றும் அச்சிடப்பட்ட பின் அவை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


சிறீ செல்வா திரையில்

அஜித் நடித்த

**உயிரோடு உயிராக**

காட்சிகள் 10.30, 2.30 (ப.நே)

யாழ்ப்பாணம்.



லஷ்சுமி தியேட்டர்

*E. S. L*

இணுவில்

அஜித், ஷாலினியின்

**அமர்க்களம்**

காட்சிகள்

10. 30, 2. 30 (ப.நே)


**அபிவிருத்தி . . .**

சாலை, சுகாதாரத்திணைக்களம் கல்வித்திணைக்களம் நீர்பாசனத் திணைக்களம், வீதிஅபிவிருத்தி அதிகார சபை, விவசாயத்திணைக்களம், மின்சார சபை, ரெலிகொம் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை, பிரதேசசெயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

இணையத் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரன் மேலும் பேசுகையில்,

வெளிநாட்டு நிதிநிறுவனங்கள் தாங்கள் செய்யும் நிதி உதவியை நேரடியாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். இப்படி அனுப்புவதின் மூலம் இங்கு பாதிக்கப்பட்டவர்கள் முழுமையாக பயன் அடைய முடியும் என்றும் நிதி உதவி வழங்கும் நாடுகளும், பொது அமைப்புகளும் தமது உதவி சரியான முறையில் பயன்படுத்தப்பட்டால் நல்லபயன்களை அடைய முடியும்.

மக்களுடைய தேவைகளை நாம் இனங்கண்டு திட்டங்கள் தீட்டினால் மட்டுமே எமக்கு வெற்றிகிடைக்கும்.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் புனர் அமைப்பு, புனர்வாழ்வு திட்டங்களை நிறைவேற்ற 300ஆயிரம் மில்லியன் ரூபா தேவையாக உள்ளது.

திட்ட அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டு அமுல் செய்வதற்கு, அரச அதிகாரிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இந்த ஆய்வுப்பட்டறையை யாழ். மாவட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணையம் உலகவங்கி கொழும்பு மனிதநேயஅமைப்புக்கள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடாத்தியது.

# கட்சித் தாவல் திருத்தசட்டமூலத்தை ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கும்

## செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

கட்சித்தாவல், சட்டத்திருத்த மசோதா, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டால் அதனை எதிர்ப்பதென நேற்றுக்கூடிய ஐ.தே கட்சி செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே. கட்சியின் இச் செயற்குழுக் கூட்டம் நேற்று கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறி கோத்தாவில் நடைபெற்றது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசு முன்வைக்கும் யோசனைகளை ஐ,தே கட்சிக்கு அரசு நேரடியாக அறிவிக்க வேண்டும்.

கட்சித்தாவல் சட்டத்திருத்தம் மூலம் இதுவரை எவரும் சமர்ப்பிக்கவில்லை. சட்டமூலம் சமர்ப்பிக்காது இருப்பதினால் நாம் அதுதொடர்பாக ஒன்றும் ஆராயத்தேவையில்லை.

பாராளுமன்ற தேர்தல் பற்றி பேசும் போது ''எப்பொழுது தேர்தல் நடத்தினாலும் சரி நடத்தா விட்டாலும் சரி புதிய உபாயங்களைக் கையாண்டு தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம் என்று கூறினார்.

தேசியப் பட்டியல் எம்.பிக்களை நியமனம் செய்வது தொடர்பாக இக்கூட்டத்தில் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை என்றும் தெரிய வருகிறது.

இதேவேளை கட்சியின் செயற்குழுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா எடுக்கும் எந்தவிதமான தீர்மானத்துக்கும் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை நகரசபைத் தலைவர் மறைவுக்கு மக். ஜன. பேரவை கண்டனம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மூத்த உறுப்பினரும் பருத்தித்துறை நகர சபைத் தலைவருமாகிய திரு. வடிவேலு விஜயரெட்ணம் அவர்களின் மறைவு அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

இவ்வாறு மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவர் திரு.நா. இ. இராமேஸ்வரன் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரின் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று இரண்டு வருடங்களாகின்றது. இதுவரை பல உறுப்பினர்களை இழந்துள்ளோம். ஆனால் மக்கள் விரும்புவது அமைதியையே கட்சிபேதமின்றி அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதனூடாகவே இவ்வாறான இழப்புக்களை தவிர்க்க முடியும் என நாம் கருதுகிறோம்.

நகரசபைத் தலைவர் அவர்களது இழப்பால் துயருறும் அவரது கட்சிக்கும், குடும்பத்தினரிற்கும் அவருடன் இச் சம்பவத்தில் உயிரிழந்த அலுவலக உதவியாளர் மூதலி பகீரதன் அவர்களின் குடும்பத்தினரிற்கும் எமது கட்சியின் சார்பாக அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்,

# அரசுசார்புதொழிற்சங்க அமைச்சர்அலவி தலைமையில்இன்றுஆர்ப்பாட்ட ஊர்வலம்

[கொழும்பு]

அரசசார்பு தொழிற்சங்கங்கள் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் கண்டித்தும். அரச அதிகாரிகளின் நிர்வாக சீர்கேடுகளைக் கண்டித்தும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் லிவ்டன் சுற்று வட்டத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிரந்தரக் குடியிருப்பாளர்கள் பொலிஸில் பதிவு செய்யத் தேவைஇல்லை

(கொழும்பு)

கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் நிரந்தரமாகக் குடியிருக்கும் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யத் தேவையில்லை. கடமையின் நிமித்தம் வாடகை அறைகள், லொஜ்களில் தங்கியிருப்போர், விருந்தாளிகள் மாத்திரமே தமது பெயர்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

எனினும் மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்பின்பேரில் நிரந்தரக் குடியிருப்பாளர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல முடியும். இத்தகவலை பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்இப் பொலிஸ் பதிவு குறித்து அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் தம்மால் சுற்றுநிருபங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (7)

**வேறு . . .**

தியில் கடற்றொழில் செய்வதற்கு வாய்ப்புகள் இருப்பதினால் அங்கு சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி தருமாறு கேட்டுள்ளனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5000 கடற்றொழிலாளர்கள் கடந்த இரண்டு மாதங்களாக கடற்றொழிலில் ஈடுபடமுடியாது கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

**அரசியலில் . . .**

யாக இருந்து வந்தாலும் கட்சித் தலைமையை ஏற்பது பற்றி நான் சிந்திக்கவில்லை என்று கூறினார்.

இதேவேளை அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் குமர குருபரன் கட்சியின் செயற்குழு கூடவிருப்பதாகவும் புத்திஜீவிகள் பலர் கட்சியில் சேரவிருப்பதாகவும் இவர்களைக் கொண்டு கட்சியைப் பயன்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

# பாடநெறி ஆரம்பம்

யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் கல்வியாண்டு 2000 இற்கான புதிய பாடநெறிகள் வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பாடநெறிகள் ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும் அவை இப் புதிய திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# பேராசிரியர் செல்வநாயகம் நினைவுரை

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் நாளை பிற்பகல் 2. 30 மணிக்கு இடம்பெறும்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ்,பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் கலாநிதி வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணன் ஆகியோர் நினைவுப் பேருரையையும் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நன்றியுரையையும் ஆற்றுவர். (ந)

# இன்றுஇ.தொ.கா கூடுகிறது

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம்பற்றி ஆராய்வதற்கு இ. தொ. கா. இன்று கூடுகிறது.

சௌமியபவனில் கூடவிருக்கும் இக்கூட்டத்திற்கு ஆறுமுகம் தொண்டமான் தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்தில் இ. தொ. கா.பாராளுமன்றஉறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் கட்சி அமைப்பாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# கோஸ்தானியா விமானவிபத்து

கோஸ்தானியாவை சேர்ந்த விமானம் ஒன்று கரோபியன் கடற்கரைப் பகுதியில் சென்றுகொண்டிருந்த சமயம் வீழ்ந்து வீடுஒன்றுடன் மோதியது.

இவ்விபத்தில் நான்குபேர் கொல்லப்பட்டனர். பதினான்கு பேர் காயமடைந்துள்ளனர். விமான ஓட்டியும் துணைவிமானியும் காயத்துடன் தப்பிக்கொண்டனர்.

## அன்பு மாணவர்களே!

நாளை புதன்கிழமைமுதல்ஒவ்வோர்புதன்கிழமையும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சைக்கான பயிற்சி வினாக்கள் வெளிவரும். உங்கள் விடைகளைத் தரப்பட்டுள்ள படிவத்துடன் இணைத்து கல்விப் பகுதி வலம்புரி இல.15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் ஒவ்வோர் புதன்கிழமையும் வலம்புரியில் வெளிவரும்.

- ஆசிரியர்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.